[31st March 1969

Language Resolution passed by the Tamil Nadu Legislative Assembly

*314 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the resolution passed in the special session of the Tamil Nadu Legislative Assembly on the language problem was forwarded to the Central Government ; and

(b) the reply received from them ?

தமிழ்நாடு சட்டசபையின் மொழி தீர்மானம்.

திரு. என். ஆர். தியாகாாஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மொழிப் பிரச்னையைப்பற்றி சென்னை சட்ட மன்றத்தின் விசேஷ கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் மத்திய சர்க்காருக்கு அனுப்பப் பட்டதா ?

(இ) அங்கிருந்து என்ன பதில் வந்தது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு உள்துறை அமைச்சரிடமிருந்து பதில் ஒன்று பெறப்பட்டுள்ளது. வந்த பதிலின் கருத்துச் சுருக்கம் வருமாறு—

ஆங்கிலம் மத்திய அரசின் ஆட்சி மொழியாகக் காலவரையின்றி தொடர்ந்து இருந்துவர இத்தீர்மானம் வகை செய்யும். இது பெரும் பாலான மாநிலங்களுக்கு ஏற்கத்தக்கதல்ல. 1967-ம் ஆண்டு ஆட்சி மொழி (திருத்த) சட்டம் காலஞ்சென்ற இரண்டு பிரதம மந்திரிகளின் உறுதிமொழிக்கு சட்ட வடிவம் கொடுத்து மத்திய அரசில் இரண்டு மொழிகள் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருப்பதற்கு உறுதியாக வகை செய்கிறது. இந்திமொழி பேசாத மக்கள் மீது சுமத்தப்படும் சமநிலையற்ற பொறுப்புகள் குறித்து (unequal burden) ஆலோசனை செய்யப்படும். மும்மொழித் திட்டத்தை நீக்கிவிடுவதன் விளைவாக நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் முயற்சிகள் தடைப்படும். எல்லா மொழிகளையும் வளர்ப்பதற்குத் தேவையான நிதி உதவி அளிக்கப்படும்.

N.C.C. Staff

* 315 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any ousting order was issued to 1,600 workers connected with N.C.C. in Tamil Nadu ; and

(b) whether the ousting order was issued to 35 persons in Madurai district alone ?

என்.சி.சி. ஊழியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் என்.சி.சி. சம்பந்தப்பட்ட ஊழியர் 1,600 பேருக்கு வேலை நீக்க உத்தரவு தரப்பட்டுள்ளதா ?

(இ) இவர்களுக்கு மாற்று வேலை தர எடுத்த முயற்சிகள் யாவை ?